MINISTÈRE
DES SOLIDARITÉS
ET DE LA SANTÉ

*Liberté*
*Égalité*
*Fraternité*



# நான் நோயாளியாக இருக்கின்றேன்

## என்னை குணப்படுத்த நான் போகலாம்

எனக்கு அருகாமையில் உள்ள வைத்தியர்களினதும் வைத்திய நிறுவனங்களினதும் பட்டியலை http://annuairesante.ameli.fr என்னும் இணையத்தளத்தில்

அவசர நிலைமையில் 15 அல்லது 112 என்னும் இலக்கத்திற்கு தொலைபேசி அழைத்தால் உங்களது

### வைத்தியசாலைக்கு அப்பால் ஒரு வைத்தியரிடம்

எந்தவொரு வைத்திய தேவைகட்கும் ஒரு சாதாரண வைத்தியரை நாடலாம். அவர் உங்களை பரிசோதித்தபின் உங்களுக்கு தேவையான மருந்துகளை பரிந்துரைப்பார். உங்களுக்கு மேலதிக பரிசோதனைகளும் சிகிச்சைகளும் தேவைப்படின், அவர் உங்களை சிறப்பு வைத்தியரிடம் அல்லது மருத்துவ உதவியாளரிடம் (மருத்துவ தாதி, உடற்பயிற்சி நிபுணர்) தங்களை அனுப்பி வைப்பார்.

### மருந்தகம்

வைத்தியரினால் அல்லது வைத்தியசாலையினால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை வாங்குவதற்கு. ஆலோசனைகளை பெறுவதற்கு

பணம் செலுத்தும் சிகிச்சைகளுக்கான செலவுகள் உங்களது வைத்திய காப்புறுதியினால் போறுப்பேறகப்படலாம். மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளுக்கு இரண்டாம் பக்கத்தையும் விண்ணப்பம் செய்வதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களையும் பார்க்கவும்

### வைத்தியசாலை

**அவசர தேவைகட்கு**

குறிப்பிட்ட சில பரிசோதனைகட்கு அல்லது சிறப்பு வைத்தியரை தொடர்பு கொள்வதற்கு: நேர நியமனம் மூலம்.

### தங்களது நிலைலம எதுவாக இருந்தாலும் இலவசமக சிகிச்லச பெறுந் இடங்கள்.

- சிகிச்சைகளுக்காண நிரந் அணுகுமுசந நிசலையங்கள் (PASS)
- கர்ப்பிண◌ி பெண்களுக்கும் ஆறு வயதுக்குட்பட் குழந்தைகட்கும்: PMI நிறுவனம்
- காச நே◌ாய்க்கு: காசநே◌ாய் கட்டுப்பரடு நிறுவனம் (CLAT)
- எயிட்ஸ் (VIH) அன்னது கன்லீரல் நே◌ாய், பாலியல் உறவு மூலம் தே◌ாற்றும் நே◌ாய்கள் பர◌ிதகோனைகளுக்கு: CeGIDD
- கருத்தடை வழிமுறைகளை பெற்றுகொள்வதற் கு: குடும்ப திட்டமிடல் நிறுவனம் (CPEF)
- போதை அடிமைக்கு: CARRUD, CSAPA
- சிறப்பு நிறுவனங்கள்

## தெரிந்துகொள்ளவேண்டியவை

பாரபட்சமற்ற தன்மையும் மருத்துவ இரகசியமும்.
மருத்துவ துறை சார்ந்தவர்கள் (வைத்தியர்கள், தாதிகள், பல் வைத்தியர்கள் மற்றும்) உங்களது தோற்றத்தின் அடிப்படையில் உங்களுக்கு சிகிச்சை வழங்க மறுக்க முடியாது. அத்துடன் அவர்கள் உங்களது உடல் நிலை தொடர்பான தவல்களை அரச நிர்வாகம் உட்பட வேறு நபர்களுக்கு வழங்க முடியாது.

குடும்ப வைத்தியர்
சிறந்த முறையில் சிகிச்சை பெறுவதற்கும் அதற்கான செலவை மீள பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் ஒரு வைத்தியரை தெரிவு செய்ய வேண்டும். அவர் உங்களது சிகிச்சைகளை தொடர்வதற்கு பொறுப்பாகவிருப்பார். அவருடனான முதல் சந்திப்பின் போதே அது தொடர்பாக அவருடன் பேசவும்.

பூரணமான தவல்கள் பெறப்படாத நிலைமையிலும் உங்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையிலும், எந்தவொரு வைத்திய செயற்பாடுகளையோ சிகிச்சைகளையோ மேற்கொள்ள கூடாது

MINISTÈRE
DES SOLIDARITÉS
ET DE LA SANTÉ
*Liberté*
*Égalité*
*Fraternité*

*பிற நாடுகளில் இருந்து ஐரோப்பாவிற்கு வரும் முறையான நிலையில் உள்ள அனைத்து மக்களின் கவனத்திற்கு*
*ஆகஸ்டு 2020*

# உங்கள் மருத்துவச் செலவுகளைச் சந்திக்க ஏதுவான மருத்துவக் காப்பீட்டை எவ்வாறு பெறுவது?

ஃப்ரான்ஸ் நாட்டில் அனைத்து மருத்துவச் சேவைகளுக்கும் கட்டணம் செலுத்த வேண்டும். **ஆனால் நீங்கள் மருத்துவக் காப்பீடு செய்து கொள்வதன் மூலம் உங்கள் குடும்ப நிலைக்குத் தகுந்தவாறு உங்கள் மற்றும் குடும்பத்தாருடைய மருத்துவச் செலவுகளை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ சமாளிக்க முடியும். உங்கள் பகுதியைச் சேர்ந்த** CPAMஐ **(மருத்துவக் காப்பீட்டிற்கான முதல் நிலை அலுவலகம்) அணுகி தகவல் மற்றும் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**3646 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தொலைபேசி மூலமாகவோ (கட்டணத்திற்குட்பட்டது) அல்லது www.ameli.fr மற்றும் www.complementaire-sante-solidaire.gouv.fr இணைய தளங்கள் மூலம் தகவல் பெறலாம்.

**கவனம்**

- ✓ **உங்கள் குழந்தைகளுக்கு மருத்துவ உதவி தேவை எனெறால்** நீங்கள் உன்னமும் விண்ணப்பிக்கவில்லையென்றாலும் அல்லது அது பரிசீலனையில் இருந்தாலும் நீங்கள் CPAMஐ அணுகி படிவல்களைப் பூர்த்தி செய்து பில்களை இணைத்து சீக்கிரம் செலவிற்கான உதவி கோரலாம்.
- ✓ **ஒரு நிலையான விலாஸத்தைத் தர வேண்டும்.** அல்லது ஒரு நிறுவனத்திடம் கோரி (உ.ம். CCAS) கடிதங்களைப் பெறுவதற்கான ஒரு விலாஸத்தைக் கேட்டுப் பெற வேண்டும்.

## தங்குவதற்கான உரிமம் வைத்துள்ளீரகள். உங்கள் மருத்துவச் செலவுகளைச் சந்திக்க 2 காப்பீடுகள் எடுக்க வேண்டும் :

**1) உங்கள் மருத்துவக் காப்பீடு** :

இதன் மூலம் உங்கள் மருத்துவச் செலவில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும். CPAM இல் படிவங்களைப் பெற்று அதனுடன் ஆவணங்களை இணைத்து அளிக்க வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் <உரிமைகளுக்கான சான்று> எனும் ஆவணம் கொடுக்கப்படும். பிறகு <காப்பாடு அட்டை> எனும் அட்டை கொடுக்கப்படும். இந்த அட்டையை நீங்கள் மருத்துவர், மருத்துவ மனை, மருந்தகம் ஆகியவற்றில் கொடுத்தால் செலுத்திய பணம் திரும்பக் கிடைக்கும்.

2) **கூடுதல் காப்பீடு :**

இதன் மூலம் அதிகத் தொகை திரும்பக் கிடைக்கும், முழுவதுமாகவோ அல்லது **வருமானத்திற்குத் தகுந்தவாறு மற்றும் ஒப்பந்தப்படி** ஒரு பகுதியோகிடைக்கும்.

- **உங்கள் வருமானம் குறைவாக இருந்தால்:** எந்த ஒரு செலவும் இன்றி **கூடுதல் மருத்துவக் காப்பீடு (C2S),** இலவசமாகக் கிடைக்கும். மருத்துவர், மருத்துவ மனை அல்லது மருந்தகத்தில் நீங்கள் பணம் ணெலுத்த வேண்டியதில்லை. செலவுகள் நேரடியாக ஏற்றுக் கொள்ளப்படும். CPAM இல் அதற்கான படிவங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.
- **உங்கள் வருமானம் சற்றுக் கூடுதலாக இருந்தால்:** உங்கள் வயதிற்கேற்றாற்போல தேவையான கட்டணத்தைச் செலுத்தியிருந்தால் **நீங்களும் C2S** மூலம் பயன் பெறலாம். கட்டணம் செலுத்த வேண்டியிருந்தாலும் இல்லையென்றாலும் காப்பீடு ஒன்றுதான். உங்கள் CPAM இல் படிவங்களைக் கேட்டுப் பெறவும்.
- **உங்கள் வருமானம் அதிகமாக இருந்தால்C2S மூலம் பயன் பெற** ஒரு பரஸ்பர காப்பீட்டு நிறுவனத்தில் சேருவதன் மூலம் அதிகத் தொகை திரும்பப் பெறலாம். விவரங்களுக்கு அந்த நிறுவனங்களை அணுகவும்.

| நான் ஒரு அகதி / மாணவன் / ஏற்கனவே மருத்துவக் காப்பீடு பெறும் குடும்ப உறுப்பினர்: | எனக்கு குடும்ப நல அல்லது சமூக நல உதவி கிடைக்கிறது (RSA, குடும்ப நல உதவித் தொகை, தங்குவதற்கான உதவி, AAH...) : | எனக்கு ஃப்ரான்ஸ் நாட்டில் வேலை இருக்கிறது | என் நிலைமை மாறுபட்டது: |
|---|---|---|---|
| ஃப்ரான்ஸ் நாட்டிற்கு வந்ததிலிருந்து காப்பீடு பெற முடியும். **ஃப்ரான்ஸ் நாட்டில் 3 மாதங்கள்இருக்க வேண்டும் எனும் நிபந்னை இல்லாமல் நான் CPAM இல் விண்ணப்பிக்கலாம்.** | ஃப்ரான்ஸ் நாட்டிற்கு வந்ததிலிருந்து காப்பீடு பெற முடியும். **ஃப்ரான்ஸ் நாட்டில் 3 மாதங்கள் இருக்க வேண்டும் எனும் நிபந்னை இல்லாமல் நான் CPAM இல் விண்ணப்பிக்கலாம்.** | **என் வேலை தொடங்கியதிலிருந்து எனக்குக் காப்பீடு உண்டு.** ஃப்ரான்ஸ் நாட்டில் 3 மாதங்கள் இருக்க வேண்டும் எனும் நிபந்னை இல்லாமல் நான் CPAM இல் விண்ணப்பிக்கலாம். | **CPAM இல் விண்ணப்பிபதற்கு முன்பாக நான் ஃப்ரான்ஸ் நாட்டில் 3 மாதங்கள் தங்கியிருந்திருக்க வேண்டும்.** தங்கியிருந்த்தற்கான சான்றை நான் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். |

**CPAM இல் மருத்துவக் காப்பீடு கோரி விண்ணப்பிக்கும் பொழுது (விண்ணப்பத்தின் ஒரு நகலை வைத்திருக்கவும்):**

- ✓ அனைவரும் பயன் பெற உங்கள் பொறுப்பில் ஃப்ரான்ஸ் நாட்டில் வசிக்கும் அனைவரின் பெயர்களையும் சேர்க்கவும்.
- ✓ தேவைப்படும் பட்சத்தில் ஃப்ரான்ஸ் நாட்டில் 3 மாதங்களுக்கு மேல் தங்கியிருந்ததற்கான சான்றுகளை, உங்கள் பெயர் மற்றும் தேதி குறிப்பிட்டு, இணைக்கவும் (உ.ம். வாடகை ரசீது, தொலைபேசி பில், மருத்துவர் சீட்டு, ஏதாவது சங்கத்தின் இணைப்பு ...)
- ✓ உங்கள் விண்ணப்பம் வேகமாகப் பரிசீலிக்கப்படவும், சரியென்றால பணம் திரும்பப் பெறவும் மருத்துவத்திற்கான ரசீதுகளை இணைக்கவும்.